AROGYA AGAM

# ஆரோக்கிய அகம்

ஆண்டிபட்டி, தேனி மாவட்டம்-625 512

மடல் 6 | செய்தி மடல் (தனிச்சுற்றுக்கு மட்டும்) | ஜனவரி 2011

அன்புள்ள பணியாளர்களே,
வணக்கங்கள் பல,

இம்மாதம் பல சிறப்பு அம்சங்களை ஒட்டிய நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளது நாம் அனைவரும் பெருமைபடக்கூடிய விஷயமாகும். குறிப்பாக நாம் கடந்த 10 ஆண்டுகளில் திருநங்கைகளுக்காக செய்த பல்வேறு உரிமை மற்றும் அவர்கள் முன்னேற்றத்திற்கான செயல்பாடுகளின் விளைவாக இன்று திருநங்கைள் மக்கள் மத்தியிலும் அரசு மத்தியிலும் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் பல்வேறு நலத்திட்டங்கள் அறிவிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

தேனி மாவட்டத்தில் உள்ள திருநங்கைகள் சுமார் 20 பேருக்கு தங்கள் திறனை வளர்த்துக் கொள்ளவும், தங்களை புரிந்து கொண்டு சமுதாயத்தில் தலை நிமிர்ந்து வாழவும், தன்னம்பிக்கையோடும், பொருளாதாரத்திலும் சிறந்து விளங்குவதற்காகவும் இரண்டு நாள் பயிற்சி கோயமுத்தூரில் உள்ள KKID நிறுவனத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது. இதில் கலந்து கொண்ட அனைவரும் பயிற்சி சிறப்பாக இருந்தது என்று பெருமையாக கூறினார்கள். திருமிகு.சத்யா கூறும்போது திருநங்கைகளுக்கான அமைப்பு தேவையா? அப்படி தேவை என்றால் என்னென்ன குணாதிசயங்கள் இருக்க வேண்டும் என்று விவாதிக்கப்பட்டதில் திருநங்கைகளுக்கு கட்டாயம் அமைப்பு தேவை என்றும் அமைப்பை வழிநடத்துவதற்கு தன்னார்வம் கொண்டவர்கள், எந்த வித எதிர்பார்ப்பையும் நாடாதவர்கள், காலம் நேரம் பார்க்காதவர்கள் திருநங்கைகளுக்காக முழு ஈடுபாடாக உழைக்கும் பிரதிநிதிகள் முன்வர வேண்டும் என்று கற்றுக் கொண்டோம் என்றும் இதுபோன்ற பயிற்சி எங்கள் அமைப்புக்கு கொடுத்த ஆரோக்கிய அகம் நிறுவனத்திற்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம் என்று கூறினார்.

திருநங்கைகளின் வாரவிழா ஒவ்வொரு மாவட்டத்திலும், சென்னையிலும் அனுசரிக்கப்பட்டது. இவர்களின் எதிர்காலம் சிறப்பாக அமைய நாம் ஒவ்வொருவரும் அவர்கள் முன்னேற வாய்ப்புக்களை அமைத்து கொடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

மீண்டும் சந்திப்போம்....

ப.ராஜன்,
இயக்குனர், ஆரோக்கிய அகம்.

# சுகாதார திட்டம்

## எச்.ஐ.வி/எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள்:

ஆரோக்கிய அகம் சமுதாய பராமரிப்பு மையத்தின் மூலமாக இரண்டு தாய்மார்களுக்கு தலா ரூ.6000/- வீதம் அரசின் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு திட்டம் மூலமாக பெற்று தந்து அவர்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கு உறுதுணையாக இருந்திருக்கிறது என்பது மிகையாகாது. இரண்டு நபர்களுக்கு **ART II line** சிகிச்சை கிடைக்க செய்துள்ளார்கள். அவர்கள் வாழ்நாள் நீடித்து நலமுடன் வாழ்வார்கள் என்பதில் ஐயமில்லை. எச்.ஐ.வி/எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட 19 நபர்கள் **ART** கூட்டு மருந்து சிகிச்சை தொடர்ந்து எடுப்பதற்காக அரசால் அறிவிக்கப்பட்ட இலவச பஸ் பாஸ் திட்டத்தின் கீழ் பயன் அடைந்து உள்ளார்கள். இத்திட்டத்தின் மூலம் அனைத்து கூட்டு மருந்து சிகிச்சை எடுப்பவர்களும் பயன் பெற வேண்டும் என்று மாவட்ட ஆட்சியரிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

- எச்.ஐ.வி/எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடல்நலம், மன நலம் நன்றாக இருக்க யோகா பயிற்சி மாதம் ஒரு முறை கொடுக்கப்படுகிறது. இந்த பயிற்சி பணியாளர்களுக்கு கொடுக்க வேண்டும் என்ற சீரிய நோக்குடன் நமது இயக்குனர் திருமிகு. ராஜன் அவர்கள் முயற்சியால் 20.01.2011 அன்று 20 பணியாளர்களுக்கு யோகா பயிற்சி நடைபெற்றது. இந்த யோகா பயிற்சி மூலம் மன நலம், உடல் நலம் நன்றாக உள்ளது என்று பணியாளர்கள் சொல்லும்போது மகிழ்ச்சியாக உள்ளது.

- டாக்டர்.சுரேஷ் (ART- மருத்துவர்) அவர்கள் HIV/AIDS பற்றிய தற்போதைய புள்ளி விபரம், நோயின் தாக்கம், மற்றும் கூட்டு மருந்து சிகிச்சையின் முக்கியத்துவம் பற்றிய பயிற்சி 08.01.2011 அன்று ஜீவன் ஜோதி மையத்தில் நடைப்பெற்றது. அதில் சமுதாய நல பராமரிப்பு பணியாளர்கள் கலந்து கொண்டு பயன் அடைந்தனர்.

- 23.01.2011 அன்று ஆண்டிபட்டி அரசு மருத்துவமனையில் நடைப்பெற்ற போலியோ சொட்டு மருந்து முகாமில் நமது சமுதாய நல பணியாளர்கள் கலந்து கொண்டு 104 குழந்தைகளுக்கு சொட்டு மருந்து கொடுப்பதற்கு உதவி புரிந்துள்ளனர். மேலும் M.சுப்புலாபுரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் போலியோ சொட்டு மருந்து வழங்க நமது நான்கு சக்கர வாகனம் பயன்படுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**இலவச மருத்துவ முகாம் :**

சமுதாய பராமரிப்பு மையம் மூலமாக 21, 22 தேதிகளில் கடமலைக்குண்டு மற்றும் உத்தமபாளையம் பகுதிகளில் இலவச மருத்துவ முகாம் எச்.ஐ.வி/எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நடைபெற்றது. அதில் 30 நபர்கள் சிகிச்சை பெற்று நலமாக உள்ளார்கள்.

**காச நோய் திட்டம் :**

நமது T.B களப்பணியாளர்கள் மூலமாக மகளிர் சுய உதவி குழுக்கள் மற்றும் அருந்ததியர் மக்களுக்கு TB/HIV பற்றிய விழிப்புணர்வு அளிக்கப்பட்டது. இதில் 160 பேர்கள் கலந்து கொண்டனர். இதன் மூலம் 13 DOTS Volunteers தேர்ந்தெடுக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றனர்.

**தொலைக்காட்சி சேனல் மூலமாக காசநோய் பற்றிய விழிப்புணர்வு:**

- வளர்ச்சி செயலாக்க குழுமம் காசநோய் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சியினை 26.01.11 முதல் ஆண்டிபட்டி, உத்தமபாளையம், கம்பம் ஆகிய பகுதிகளில் சிகரம் என்ற உள்ளூர் சேனலில் குறும்படம் மூலமாக ஒலிபரபிக் கொண்டு வருகிறது. இதற்கு ஆரோக்கிய அகம் T.B களப்பணியாளர்கள் முழு ஒத்துழைப்பு கொடுத்து வருகிறார்கள். இதன் மூலம் ஆரம்ப நிலையில் உள்ள காசநோயாளிகள் அரசு சுகாதார மற்றும் தொண்டு நிறுவனங்களை அணுகி பயன் அடைவார்கள் என்று நம்புகிறோம்.
- காசநோய் என்று கண்டறியப்பட்ட 34 நபர்களுக்கு தொடர் சிகிச்சை (Real Dots) அளித்து முற்றிலும் குணம் அடைந்து நன்றாக உள்ளார்கள். மேலும் காசநோய் திட்டத்தின் மூலமாக TB யால் பாதிக்கப்பட்ட நபர்கள் "DOTS" எடுக்க அரசு மருத்துவமனைக்கு செல்லமுடியாத சூழ்நிலையில் DOTS Volunteers மூலம் வழங்கப்பட வருகிறார்கள். இதன் மூலம் TB மாத்திரை இடைநிறுத்தம் ஆகாமல் தடுக்கப்படுகிறது.

## குழந்தைகள் நல திட்டம்

- KNH நிறுவன பங்குதாரர்கள் மற்றும் தொண்டு நிறுவன பிரதிநிதிகள் 30 பேர் கோவையில் உள்ள KKID குழந்தைகள் பாதுகாப்பு கொள்கை பற்றிய கலந்துரையாடலில் பங்கேற்றனர். திருமிகு.சாரதா, குழந்தைகள் நல திட்ட

ஒருங்கிணைப்பாளர், ஆரோக்கிய அகத்தின் சார்பாக கலந்துகொண்டார். இக்கலந்துரையாடலில் குழந்தைகளுடனும் மக்கள் அமைப்புகளுடனும் கலந்துரையாடி வரையறுக்கப்பட்ட ஆரோக்கிய அகத்தின் குழந்தை பாதுகாப்பு கொள்கைளை திருமிகு.சாரதா பகிர்ந்து கொண்டார்.இப்பயிற்சியில் குழந்தைகள் உரிமைகள் சார்ந்த இந்திய சட்ட விதிமுறைகள், குழந்தைகள் பாதுகாப்பு கொள்கைகளில் இடம் பெறவேண்டிய முக்கிய அம்சங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தும் யுக்திகள் போன்ற கருத்துக்கள் பகிர்ந்து கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சிகளுக்கு KNH நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

## ஆண்டிபட்டியில் தேசிய பெண் குழந்தைகள் தினம் கொண்டாட்டம்

தேசிய பெண் குழந்தைகள் தினம் ஆண்டிபட்டி ஆரோக்கிய அகம் சார்பில்





சக்கம்பட்டியில் அமைந்துள்ள ஹந்து மேல் நிலைப்பள்ளியில் கொண்டாடப்பட்டது. பள்ளி செயலாளர் ரவீந்திரன் தலைமை வகித்தார். பெண் குழந்தைகள் முக்கியத்துவம், ஆண், பெண் பிறப்பு விகிதாச்சாரம் சமநிலைப்படுத்துதல், பெண் கருக்கொலை, சிசுக்கொலை தடுப்பு குறித்து ஆரோக்கிய அகம் இயக்குனர் திருமிகு.ராஜன் பேசினார். பள்ளிகளில் அரையாண்டு தேர்வில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பிரான்ஸ் நாட்டை சேர்ந்த ஜில், எலிசபத் பரிசுகள் வழங்கினர். தலைமை ஆசிரியர் பழனிவாசன், உதவி தலைமை ஆசிரியர் சண்முகசுந்தரம், ஆரோக்கிய அகம் குழந்தைகள் நலத்திட்ட பணியாளர்கள், தேன்சுடர் பெண்கள் இயக்க பணியாளர்கள், அருந்ததியர்கள் நலத்திட்ட பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

T.பொம்மிநாயக்கன்பட்டி, வீரசிங்கபுரம், ராஜகால்பட்டி, தேக்கம்பட்டி, பாலூத்து கிராமங்களில் விளையாட்டு போட்டி, விழிப்புணர்வு நிகழ்வு, வினாடி வினா ஆகிய போட்டிகள் பெண் குழந்தைகளை ஊக்குவிக்கும் வகையில் நடைபெற்றது.போட்டியில் வெற்றி பெற்ற அனைருக்கும் பரிசுகள் வழங்கப்பட்டது.

## குழந்தைகள் RCPDS நிறுவன விஜயம்:

கடந்த 27.12.2010 அன்று ஆண்டிபட்டி பகுதியில் உள்ள 53 கிராமங்களை சேர்ந்த 45 அருந்ததியர் குழந்தைகள் வரவழைக்கப்பட்டு ஆரோக்கிய அகத்தின் மூலம் வரையறுக்கப்பட்ட குழந்தைகள் பாதுகாப்பு கொள்கையை பற்றி குழந்தைகளின் மத்தியில் விளக்கப்பட்டது. இக்கூட்டத்தினை திருமிகு. ராஜன், இயக்குனர், ஆரோக்கிய அகம் வழிநடத்தினார். குழந்தைகள் அனைவரும் தங்களின் பாதுகாப்பு உரிமைக்கேற்றவாறு இருக்கிறது என்று பெருமையுடன் கூறினார்கள்.



மறுதினம் 28.12.2010 அன்று இக்குழந்தைகள் KNH-ன் பங்குதாரரான திருச்சுழியில் உள்ள RCPDS நிறுவனத்திற்கு பேருந்தில் அழைத்துச்செல்லப்பட்டனர். அந்நிறுவனத்தில் இயங்கி வரும் குழந்தைகள் குழுக்கள் மற்றும் அக்குழந்தைகளால் செயல்படுத்தப்பட்டு வருகின்ற இயற்கை விவசாய முறையையும் பார்வையிட்டனர். அந்நிறுவனத்தின் இயக்குனர் திருமிகு.ஜான் தேவாரம் அவர்களும், திட்ட இணையாளர், திருமிகு.நிர்மல் அவர்களும் குழந்தைகளின் செயல்பாடுகள் குறித்து விளக்கமளித்தார்கள். நம் குழந்தைகளும், அந்நிறுவன குழந்தைகளுடன் கலந்துரையாடலின் மூலம் தெளிவு பெற்று இது போன்ற செயல்பாடுகளை தங்கள் கிராமங்களிலும் செய்ய வேண்டுமென்று ஊக்கமடைந்தனர். குழந்தைகள் திட்ட பணியாளர்கள் உடன் சென்றிருந்தனர். குழந்தைகளின் பங்கேற்பு உரிமையை உறுதி செய்வதன் மூலம் தங்கள் உரிமைகளை அவர்களாகவே பெறுவார்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

## தாய் திட்டம்

- பியர் ஜீவன்களுக்கான திறன் வளர்ப்பு பயிற்சி 27.12.2010 அன்று நடைபெற்றது. அதில் திருமிகு.ரத்னகிரி அனைவரையும் வரவேற்று பேசினார். தாய் திட்ட அலுவலர் திருமிகு.தனபால், அவர்கள் பயிற்சியை துவக்கி வைத்து பயிற்சியின் நோக்கம் மற்றும் அதன் முக்கியத்துவம் பற்றியும் கூறினார். திருமிகு.டாக்டர் சுரேஷ் ART மருத்துவ அதிகாரி மற்றும் திருமிகு.டாக்டர் அங்கையற்கன்னி, மருத்துவ அதிகாரி ஆகியோர் கலந்துகொண்டு பியர்ஜீவன்களும் இலக்கு மக்களும் எச்.ஐ.வி/எய்ட்ஸ் பற்றிய செய்திகள்



தெரிந்து கொள்வது மட்டும் இல்லாமல் அடிக்கடி வரக்கூடிய சந்தர்பவாத நோய்களைப்பற்றியும் தெரிந்திருக்கவேண்டும் என வலியுறுத்தினார்கள். அதனடிப் படையில் சிறப்பு இலக்கு மக்களுக்கு அடிக்கடி பாதிக்ககூடிய சந்தர்பவாத நோய்களில் காசநோய் மிகவும் முக்கியமானது ஆகும். காசநோயின் அறிகுறிகள், பரவும் விதம், சிகிச்சை முறை, பரிசோதனை மையங்கள், சிகிச்சை கிடைக்கும் இடங்கள் போன்ற விபரங்களும் டாட்ஸ் பற்றிய செய்திகளும் டாக்டர்.சுரேஷ் அவர்கள் எடுத்துக்கூறினார்.

மேலும் அவர் கூறியதாவது ஒரு வீட்டிற்கு மிகவும் முக்கியமானது 'மேற்கூறை' அதைப்போல ஒரு மனிதனுக்கு முக்கியமானது அவனது உடலில் உள்ள 'நோய் எதிர்ப்பு சக்தி (CD4) ஆகும் அதை குறையவிடாமல் பாதுகாத்துக்கொள்வது ஒவ்வொருவரின் முக்கிய பொறுப்பாகும். அதிலும் குறிப்பாக சிறப்பு இலக்கு மக்கள் அதிக கவனம் எடுத்துக்கொள்ளவேண்டும் அவர்களுக்கு CD4 குறையும்பொழுது மருத்துவரின் ஆலோசனைப்படி ART மருந்துகள் எடுத்துக்கொள்ளலாம். ART மருந்து தேனி அரசு கல்லூரி மருத்துவமனையில் இலவசமாக கிடைக்கிறது என்று தெளிவாக கூறினார். அதனைத் தொடர்ந்து இலக்கு மக்கள் மற்றும் பியர்ஜீவன்கிடையே உள்ள எச்.ஐ.வி/எய்ட்ஸ் பற்றிய கேள்விகள், சந்தேகங்கள், தவறான கருத்துக்கள் போன்றவற்றிற்கு டாக்டர்.அங்கையற்கன்னி தெளிவாகவும் புரியும் விதத்தில் விளக்கமளித்தார்.



- தேனி மாவட்டத்தில் 18.01.2011 முதல் 22.01.2011 வரை திருநங்கைகள் வார விழா கொண்டாடப்பட்டது. அதில் ஆண்டிபட்டி, பெரியகுளம், டி.கள்ளிப்பட்டி, அல்லிநகரம், கம்பம் ஆகிய பகுதிகளில் பொது மக்கள் இடையே நீரிழிவு நோய் பற்றிய விழிப்புணர்வு செய்திகளையும் கலைநிகழ்ச்சிகள் மூலம் திருநங்கைகள்

எடுத்துக்கூறினார்கள். மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரிசுகளும் வழங்கப்பட்டது.

- சென்னையில் 24.01.2011 அன்று தமிழ்நாட்டில் உள்ள அனைத்து திருநங்கைகள் ராஜரத்தினம் ஆடிட்டோரியத்தில் இருந்து மெரினா டவர் வரை ஊர்வலமாக சென்று திருநங்கைகள் தினத்தை ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் 18 ஆம் தேதியை அறிவிக்க தமிழக அரசிடம் வலியுறுத்தப்பட்டு தீர்மானம் நிறைவேற்றினார்கள். தாய் திட்ட இயக்குனர் டாக்டர்.லெட்சுமிபாய் மற்றும் திருநங்கைகள் பிரதிநிதிகள் மாண்புமிகு துணை முதல்வர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து கோரிக்கைகளை சமர்ப்பித்தார்கள். இக்கோரிக்கைகள் உடனே பரிசீலிக்கப்படும் என்று கூறியுள்ளார். ஆரோக்கிய அகம் சார்பாக திரு.ரத்னகிரி தலைமையில் சுமார் 50 திருநங்கைகள் கலந்துகொண்டனர்.

# பெற்றோர் சேய் மேவா திட்டம்

## பெற்றோர் சேய் மேவா விழிப்புணர்வு நாடகம்:

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் தமிழ்நாடு பல்துறை விளக்க பயிற்சிக் கூட்டம் நடைபெற்றது. இதில் அரசின் பல்வேறு துறைகள் சார்பாக கண்காட்சி, விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சுகாதார துறை சார்பாக 01.01.2011 அன்று எச்.ஐ.வி/எய்ட்ஸ், பெற்றோர் சேய் மேவா திட்டம் சேவைகள் குறித்து ஆரோக்கிய அகம் பெற்றோர் சேய் மேவா திட்டம் தன்னார்வலர்களால் விழிப்புணர்வு நாடக நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்நிகழ்வை பாராட்டி திருமிகு.ரஞ்சனாதேவி, சிவகங்கை மாவட்ட இணை இயக்குனர், சுகாதார துறை அவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்ற ஆரோக்கிய அகம் தன்னார்வலர்களுக்கு நினைவு பரிசு வழங்கினார்.



### எச்.ஐ.வி பரிசோதனை :

நீலகிரி மாவட்டம் குன்னூர் ஒன்றியம், நெடுகல், கம்பை (ஆதிவாசி) கிராமத்தில் ஆரோக்கிய அகம் பெற்றோர் சேய் மேவா திட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் தன்னார்வலர்கள் இணைந்து எச்.ஐ.வி/எய்ட்ஸ், பெற்றோர் சேய் மேவா திட்டம் சேவைகள் மற்றும் எச்.ஐ.வி பரிசோதனையின் முக்கியத்துவம் குறித்து கிராம அளவில் 50 நபர்களுக்கு விழிப்புணர்வு கொடுத்தனர். அதன் அடிப்படையில் ஊட்டி மாவட்ட தலைமை மருத்துவமனையில் இயங்கி வரும் ஒருங்கிணைந்த ஆற்றுபடுத்தல் மற்றும் பரிசோதனை மையம் மற்றும் ஆரோக்கிய அகம் இணைந்து நடமாடும் ஊர்தி (MOBILE ICTC) உதவியுடன் 32 நபர்களுக்கு இரத்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதுபோன்ற தொண்டு நிறுவனங்கள் அரசுடன் இணைந்து செயல்படும்போது அனைத்து மக்களும் சுகாதாரத்துடன் வாழ வழி வகுக்கும் என்பதில் ஐயமில்லை.

## அருந்ததியர் முன்னேற்ற திட்டம்

### பெயர் பலகை திறப்பு விழா :

அருந்ததியராய் இணைவோம்! அதிகாரத்தைப் பெறுவோம்!

தேனி மாவட்டத்தில் அருந்ததியர் மக்கள் முன்னேற்ற இயக்கம் அருந்ததியர் மக்களை ஒருங்கிணைத்து அம்மக்களின் உரிமைகளுக்காவும் அவர்களுடைய அடிப்படை தேவைகளுக்காகவும் பணி செய்து வருகிறது. மாவட்டம் முழுவதும் 225 கிராம கிளைகள் கொண்ட அமைப்பாக செயல்பட்டு வருகிறது. அதனை அடையாளப்படுத்தும் விதமாகவும் அருந்ததியர்களின் ஒற்றுமையை அனைவருக்கும் அறிவிக்கும் விதமாகவும் உத்தமபாளையம் தாலுகா மூர்த்திநாயக்கன்பட்டியில் 09.01.2011 அன்று காலை 10 மணியளவில் AMMI பெயர் பலகை திறப்புவிழா மன்ற அமைப்பாளர் திபெக் A.பழனி தலைமையில் நடைப்பெற்றது. தாலுகா அமைப்பாளர் திரு. முருகன் வரவேற்றார்.AMMI மாவட்ட அமைப்பாளர் திருமிகு.S.M.கருப்புசாமி அவர்கள் பெயர் பலகையை திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார். இயக்க ஆலோசகர் திருமிகு. T.V.முருகேசன், மாவட்ட பொருப்பாளர் திருமிகு அ.சிவராமன் கலந்து கொண்டு கருத்துரை ஆற்றினர். முடிவில் தாலுகா ஒருங்கிணைப்பாளர் திரு.S.M.முனியாண்டி நன்றி கூறினார். இந்நிகழ்ச்சியில் அனைத்து பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

• பெரியகுளம் தாலுகா நல்லகருப்பன்பட்டி கிராமத்தில் 19.01.2011 அன்று 10 மணியளவில் அங்ஙஜ பெயர் பலகை திறப்பு விழா மன்ற அமைப்பாளர் திருமிகு.காமாட்சியம்மாள் தலைமையில் நடைப்பெற்றது. தாலுகா அமைப்பாளர் திரு.ராஜா வரவேற்றார். AMMI மாவட்ட அமைப்பாளர் திருமிகு.S.M.கருப்புசாமி அவர்கள் பெயர் பலகையை திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார்.இயக்க ஆலோசகர் திருமிகு. T.V.முருகேசன், மாவட்ட பொருப்பாளர் திருமிகு அ.சிவராமன் கலந்து கொண்டு கருத்துரை ஆற்றினர். முடிவில் தாலுகா ஒருங்கிணைப்பாளர் திரு.S.M.முனியாண்டி நன்றி கூறினார். இந்நிகழ்ச்சியில் அனைத்து பணியாளர்களும் கலந்து கொண்டனர்.

• ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் தாலுகா, பவானிசாகர் ஒன்றியம் சொலவனூர் கிராமத்தில் அருந்ததியர் முன்னேற்ற மன்றத்திறப்பு விழா நடைபெற்றது. 27.01.2011 அன்று நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு ஊராட்சி வார்டு உறுப்பினர் திரு. ராமசாமி தலைமை தாங்கினார். விழுதுகள் அமைப்பாளர் மா.தங்கவேல் பெயர்பலகையை திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். சத்தியமங்கலம் தாலுகா பொருப்பாளர்கள் மற்றும் திட்ட அலுவலர் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர். சொலவனூர் கிராம அருந்ததியர் மக்கள் உட்பட மன்ற நிர்வாகிகள் அனைவரும் கலந்துகொண்டனர். மகளிர் சுய உதவிக்குழு ஊக்குனர் திருமிகு. கலாமணி நன்றி கூறினார்.

• ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் தாலுகா, பணையம்பள்ளி கிராமத்தில் அருந்ததியர் முன்னேற்ற மன்றத்தின் சார்பாக சமூக அரசியல் விழிப்புணர்வு கூட்டம் மன்றத் தலைவர் திரு.ட.சாமிநாதன் தலைமையில் நடைபெற்றது. அருந்ததியர் மக்களின் அரசியல் பங்கேற்பு நிலை குறித்தும், கடந்த 4 ஆண்டுகளில் அருந்ததியர் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள சமூக விழிப்புணர்வு குறித்தும் தாலுகா அமைப்பாளர் திருமிகு.சத்தியா எடுத்துரைத்தார். மன்ற செயல்பாடுகளின் முக்கியத்துவம் குறித்து தாலுகா ஒருங்கிணைப்பாளர் திரு.ஆனந்தன் எடுத்துரைத்தார். இக்கூட்டத்தில் மன்ற பொறுப்பாளர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

## இடைக்கால மதிப்பீட்டின் பரிந்துரைகளைப் பற்றிய கலந்தாய்வு கூட்டம்:

DFID-AR நான்கு ஆண்டுகால திட்டத்தின் இடைக்கால மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளை பற்றிய கலந்தாய்வுக் கூட்டம் திருப்பூரில் ஹோட்டல் அன்னபூர்ணா அரங்கத்தில் 11.01.2011 அன்று காலை 10.00 மணியளவில் திரு.ராஜன், இயக்குனர், ஆரோக்கிய அகம் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கண்காணிப்பு மற்றும் ஆய்வுக்குழு உறுப்பினர்கள் திருமிகு. செல்லமுத்து, திரு.T.V.முருகேசன், திருமிகு.கிரி மற்றும் ஆவணப்படுத்துனர் குழுவைச் சேர்ந்த திருமிகு. ரூபாதேவி, திருமிகு.ஆண்டனி ஸ்டீபன், திருமிகு.சாலைசெல்வம், திருமிகு.விஜயலட்சுமி ஆகியோர் கலந்து கொண்டனர்.



இந்நிகழ்ச்சியில் திரு.ராஜன், இயக்குனர், ஆரோக்கிய அகம் வழிநடத்தினார். குழு கலந்துரையாடல், BARE FOOT DOCUMENTATION பற்றி விரிவாக விளக்கி கூறினார். AR திட்ட பணியாளர்கள் எழுப்பிய சந்தேகங்களுக்கு விளக்கமளித்து தெளிவு படுத்தினார். BARE FOOT DOCUMENTATION செய்வதற்கு சிறந்த 350 பஞ்சாயத்துகள் தேர்வுசெய்யப்பட்டது.

## தேனி மாவட்ட கலெக்டருக்கு விருது :

தேனி மாவட்ட நிர்வாகம் ஒருங்கிணைந்த மேலாண்மை முறையை சிறப்பாக செயல்படுத்தியமைக்காக 3 உலகத்தரச்சான்று "Quality Management - ISO 9001 Environment management system ISO 14001 & Occupational Health & Safety Management System-OHSAS 18001" விருதுகள் தேனி மாவட்ட கலெக்டர் திரு. பூ.முத்துவீரன்,I.A.S, அவர்களுக்கு வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.



QMS சான்றிதழ் திரு.முகமது சாத், Govt. of United Arab Emirates அவர்களால் வழங்கப்பட்டது.OHSAS சான்றிதழ் திரு.S.S.கிருஷ்ணமூர்த்தி I.A.S, I.G, தென்மண்டலம் அவர்களால் வழங்கப்பட்டது. EMS சான்றிதழ் டாக்டர்.K.கோவிந்தராஜ், இயக்குநர், சேவை தன்னார்வ நிறுவனம் அவர்களால் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சி திரைப்பட இயக்குநர் திரு.பாரதிராஜா தலைமையில் தேனி V.K.வேலுச்சாமி மஹாலில் 07.01.2011 அன்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் அரசுத்துறை அலுவலர்கள், தன்னார்வ தொண்டு நிறுவன பிரதிநிதிகள் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சியருக்கு பாராட்டுகளை தெரிவித்தனர். ஆரோக்கிய அகம் சார்பாக சமூக திட்ட மேலாளர் திரு.T.V.முருகேசன் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு பொன்னாடை அணிவித்து வாழ்த்துக்களை தெரிவித்தார். அருந்ததியர் முன்னேற்ற திட்ட அலுவலர் திரு. சிவராமன் உடனிருந்தார். அருந்ததியர் மக்களுக்கு 66 கிராமங்களுக்கு சுடுகாடு மாவட்ட நிர்வாகம் வழங்கியதை ஆட்சித்தலைவர் நினைவு கூர்ந்தது குறிப்பிடத்தக்கது.

# சமூக மேம்பாட்டு திட்டம்

## பெண்கள் முன்னேற்ற திட்டம்

### மது ஒழிப்பு கையெழுத்து பிரச்சாரம் :

20.01.2011 அன்று தேன்சுடர் பெண்கள் இயக்கம் தொடர் முழக்க பிரச்சாரமாக ஆண்டிபட்டி அலுவலகத்தில் இருந்து ஊர்வலமாக கோசமிட்டு 200 பெண்கள் ஆண்டிபட்டி தபால் நிலையம் முன்பு "மதுக்கடைகளை தமிழக அரசு முற்றிலுமாக மூட வேண்டும்" என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி கையெழுத்து படிவத்தை மாண்புமிகு தமிழக முதல்வருக்கு அனுப்பி வைத்தனர். இந்த நிகழ்ச்சிக்கு தேன்சுடர் பெண்கள் இயக்க தலைவி திருமிகு.கருத்தம்மாள் தலைமை வகித்தார். அருண்மொழி, செயலாக்க உறுப்பினர் அவர்கள் நோக்க உரை ஆற்றினார். தேன்சுடர் பெண்கள் இயக்கம் மதுக்கடைகளை முற்றிலும் மூடும் வரை தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டே இருக்கும் என்பதில் உறுதியாக உள்ளது.

### பெண்களுக்கு எதிரான வன்முறை தடுப்பு கருத்தரங்கு :

மனித உரிமையும் பெண்கள் உரிமையே!!

தேன்சுடர் பெண்கள் இயக்கம் கிராமங்களில் பெண்களுக்கு எதிரான பிரச்சினைகளை கண்டறிந்து தீர்வு காண்பதற்கு வன்முறை தடுப்பு குழு உதவி வருகிறது. இந்த குழு உறுப்பினர்களுக்கு 28.01.2011 பெண்ணுரிமை சட்டங்கள் பற்றியும் குடும்ப வன்முறை தடுப்பு சட்டங்கள் பற்றியும் விரிவாக எடுத்து விளக்கப்பட்டது. திரு.ராஜன், இயக்குனர், ஆரோக்கிய அகம் இக்கருத்தரங்கை துவக்கிவைத்து பேசினார். ஆண்டிபட்டி காவல் நிலையத்தின் துணை கண்காணிப்பாளர் திருமிகு.அன்வர்ஷா அவர்கள் பெண்கள் பிரச்சனையை




எடுத்து செய்வதில் காவல் துறையின் பங்கு பற்றி எடுத்து கூறினார். இறுதியாக வன்முறை தடுப்பு குழுவின் பங்கு குறித்த செயல்பாடுகள் வகுக்கப்பட்டு இனிவரும் காலங்களில் செயல்படுத்தவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

### சுய உதவி குழுக்கள் தரம் ஆய்வு :

தேன்சுடர் பெண்கள் இயக்கத்தில் 221 சுய உதவிக்குழுக்கள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. தகுதி வாய்ந்த 63 சுய உதவி குழுக்களுக்கு மகளிர் திட்டத்தில் குழு தரம் ஆய்வு செய்து முடிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் ஆதிதிராவிட 43 குழுக்களுக்கு அனைத்து ஆவணங்களும் தாட்கோ அலுவலகத்தில் சுழல் நிதி கடனுக்கான விண்ணப்பத்துடன் இணைத்து கொடுக்கப்பட்டுள்ளது. அரசு இதுபோன்ற தகுதி வாய்ந்த பொருளாதாரத்தில் பின்தங்கிய சுய உதவி குழுக்களுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்கள் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த முன் வர வேண்டும் என எதிர்பார்கிறோம்.

## பஞ்சாயத்து ராஜ் திட்டம்

### ஆண்டிபட்டி அருகே 100 நாள் வேலை கலந்தாய்வுக் கூட்டம் :

ஆண்டிபட்டி ஆவுடையாச்சி திருமண மண்டபத்தில் 100 நாள் வேலை குறித்தான கலந்தாய்வுக் கூட்டம் 02.01.2011 அன்று நடைபெற்றது. ஊராட்சி உதவியாளர்கள், மக்கள் நலப்பணியாளர்கள் மற்றும் தன்னார்வ தொண்டுர்களுக்காக நடந்த இக்கூட்டத்திற்கு ஆரோக்கிய அகம் நிறுவன இயக்குனர் திரு.ராஜன் தலைமை தாங்கினார். ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் சுருளிராஜன். சமூக மேம்பாட்டு திட்ட மேலாளர்



திரு.முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பஞ்சாயத்து ராஜ் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.செல்வநாயகம் வரவேற்றார். தேன்சுடர் இயக்கத்தலைவர் திருமிகு.கருத்தம்மாள் திட்டத்தை செயல்படுத்துவதில் உள்ள தடைகள், அவலத்தை நீக்கும் முறைகள், அரசு நிலங்களில் ஆக்கிரமிப்பு அகற்றுதல் குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி உதவியாளர்கள், மக்கள் நலப்பணியாளர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு முடிவில் தங்கள் கருத்துக்களை எடுத்து வைத்தனர்.

இந்த கருத்தரங்கின் முக்கிய தீர்மானங்களை தேனி மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சி நடைபெற உதவிய மாவட்ட நிர்வாகத்திற்கு நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளோம்.

## கோரிக்கைகள்

1. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத்திட்டம் சிறப்பாக செயல்பட பஞ்சாயத்து வாரியாக வருவாய்துறை அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், சுயஉதவிக்குழு பெண்கள் மற்றும் கிராம தலைவர்கள் ஆகியோர் அடங்கிய குழு ஒன்றை அமைத்து ஆண்டு செயல்திட்டம் தயாரித்தல்.

2.மேற்கண்ட குழு மூலம் தயார்செய்யப்பட்ட ஆண்டு செயல்திட்டத்தை கிராமசபை கூட்டத்தில் மக்களிடம் விவாதித்து ஒப்புதல் பெறுதல் வேண்டும் என பரிந்துரைக்கப்படுகிறது.

3. திட்டத்தை செயல்படுத்த கடப்பாரை, மண்வெட்டி, தட்டு போன்ற தலவாடசாமான்கள் வாங்க பஞ்சாயத்து நிர்வாகம் அனுமதித்தல்.

4. வேலை செய்யும் 50 நபர்களுக்கு ஒரு தணிக்கை குழு உறுப்பினரோ அல்லது அடையாள அட்டை பெற்ற பயனாளியே மேற்பார்வையில் பணிகளை செய்யவைத்தல்.

5. திட்டத்தில் சொல்லப்பட்டது போல் குழந்தைகள் காப்பகம், முதல் உதவிப்பெட்டி பணிதளத்தில் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.

6. அரசு பணி மற்றும் வசதியான குடும்ப உறுப்பினர்களுக்கும் பணி உத்திரவாத அட்டை கொடுப்பதன் மூலம் அவர்கள் ஊதியத்திற்கு ஏற்ற உழைப்பை கொடுக்காததால் மற்றவர்களும் பணிகளை சரிவர செய்யமுடியாமல் போகிறது. எனவே ஆய்வு செய்து உண்மையான ஏழைகள் மட்டும் பயனடையவும் திட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றவும் வழிவகை செய்தல்.

7.திட்டத்தைப்பற்றி மக்களுக்கு விழிப்புணர்வு கல்வி கொடுக்க நிதி ஒதுக்கீடு செய்து விழிப்புணர்வை ஏற்படுத்த பரிந்துரைக்கப்படுகிறது.

### கிராம சபை கூட்டத்தில் மக்கள் பங்கேற்பு:

பஞ்சாயத்துராஜ் திட்டத்தில் 32 பஞ்சாயத்துக்களில் ஆரோக்கிய அகம் பணி செய்து வருகிறது. இதில் 26.01.2011 ல் நடைபெற உள்ள கிராமசபை கூட்டத்திற்கு PRI TEAM மற்றும் திட்ட மேலாளர் அவர்களுடன் இணைந்து திட்டமிடப்பட்டது. 28 பஞ்சாயத்துக்களில் கிராமசபை கூட்ட விழிப்புணர்வை ஆட்டோவில் மைக் மற்றும் போஸ்டர் மூலம் விளம்பரம் செய்யப்பட்டது. அருந்ததியர்கள் வாழும் பகுதிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அருந்ததியர் சுடுகாடு, ஆக்கிரமிப்பை அகற்றுதல், அருந்ததியர் மக்களின் அடிப்படை வசதிகளை செய்து தர மன்றக் கூட்டங்கள் நடத்தி கோரிக்கைகள் வைக்கப்பட்டது. 32 பஞ்சாயத்துக்களில் கிராமசபை கூட்டம் 26.01.2011 அன்று நடைபெற்றதில் அனைத்து பணியாளர்களும் கலந்து கொண்டு அறிக்கைகள் சமர்ப்பித்ததில் 17 பஞ்சாயத்துகளில் கிராம சபா கோரம் முழுமையாக காண்பிக்கப்பட்டது. இதில் அருந்ததியர் மக்கள் பிரச்சினைகளை மக்கள் மனுக்கள் மூலம் அதிகமாக கொடுத்து கிராம சபா கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இது போல் அரசு இயந்திரங்கள் முழுமையாக பயன்படுத்தப்பட்டால் மக்களின் அடிப்படை வசதிகள் நிறைவேற கிராம சபை கூட்டம் வழிவகுக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை.

## நிர்வாகப் பிரிவு

### ஆராய்ச்சிக்கான திறன் வளர்ப்பு பயிற்சி:

இம்மாதம் 5,6,7 தேதிகளில் DACT நிறுவனத்தின் சார்பாக DACT பங்குதாரர்களாக உள்ள தொண்டு நிறுவன பணியாளர்கள் 25 நபர்களுக்கு ஆராய்ச்சிக்கான திறன் வளர்ப்பு பயிற்சி ஜீவன் ஜோதி பயிற்சி மையத்தில் வழங்கப்பட்டது. மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள பூனேயில் செயல்பட்டு வருகின்ற MASS ஆராய்ச்சி நிறுவனத்திலிருந்து திரு.சஜீ, திரு.அபை ஆகியோர் பயிற்சி அளித்தனர். பயிற்சியில் பணியாளர்களுக்கு தேவையான அடிப்படை ஆராய்ச்சி செய்வதற்கான திறன்கள் பற்றியும், அதை எப்படி தாங்கள் சமூக மேம்பாட்டு திட்டத்திற்கு பயன்படுத்தலாம் என்பதை பற்றியும் விளக்கமாக எடுத்துக் கூறினார்கள். ஆரோக்கிய அகம் நிறுவனத்தின் சார்பாக திருமிகு.அமுதா,திருமிகு.சக்குபாய் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

### தமிழ்நாடு தன்னார்வ நல குழுமத்தின் தேனி மாவட்ட கூட்டம் :

06.01.2011 அன்று தமிழ்நாடு தன்னார்வ நல குழுமத்தின் தேனி மாவட்டத்தில் செயல்பட்டு வருகின்ற 20 தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள்

கூட்டம் AHMT தேனி அலுவலகத்தில் நடைபெற்றது. திரு.முகமது இப்ராஹிம், இயக்குனர், AHMT கூட்டத்தை வழி நடத்தினார். இக்கூட்டத்தில் மாநில அளவில் நடைபெற இருக்கின்ற கருத்தரங்கிற்கான ஆயத்த பணிகள் சம்பந்தமாக விரிவாக விவாதிக்கப்பட்டது. கலந்து கொண்ட ஒவ்வொருவரும் தங்கள் கருத்துக்களை எடுத்துரைத்தனர். ஆரோக்கிய அகத்தின் சார்பாக திரு.ராஜன், இயக்குனர் கலந்து கொண்டு கருத்துக்களை எடுத்துரைத்தார்.

## தாய் சேய் மேவா திட்ட ஆண்டு அறிக்கை தயாரித்தல் :

தாய் சேய் மேவா திட்டத்தில் உள்ள பங்குதாரர்களின் பிரதிநிதிகள் ஜனவரி 18,19 ஆம் தேதிகளில் அன்று சென்னையில் கூடி கடந்த ஆண்டு செயல்பாடுகளை ஆண்டு அறிக்கையாக தயாரிப்பதற்காக புள்ளி விவரங்களை சேகரித்தனர். ஆரோக்கிய அகத்தின் சார்பாக திரு.ஜான் டால்டன், செயலாளர், திரு.ராஜன், இயக்குனர், திருமிகு.சக்குபாய், மாநில ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்களை எடுத்துரைத்தனர். ஆண்டு அறிக்கைக்கு ஒரு புது வடிவம் கொடுக்கப்பட்டு சிறப்பாக முடிந்தது

.

## DACT நிறுவன பங்குதாரர்களின் கூட்டம் :

DACT நிறுவனத்தின் பங்குதாரர்களின் கூட்டம் ஜனவரி 28 ஆம் தேதி ஆரோக்கிய அகம் பயிற்சி வளாகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் DACT செயல்படுத்தி வருகின்ற திட்டங்கள் பற்றி ஆய்வு செய்யப்பட்டது. மேலும் பிப்ரவரி மாதம் வரவிருக்கின்ற விருந்தினர்களின் திட்டமிடல் பற்றியும் பகிர்ந்து கொள்ளப்பட்டது. இக்கூட்டத்திற்கு திருமதி.வனஜா, திட்ட இயக்குனர்,DACT வழி நடத்தினார். ஆரோக்கிய அகம் சார்பாக திரு.ஜான் டால்டன், செயலாளர், திரு.ராஜன், இயக்குனர், திரு.செல்லமுத்து, திருமதி.விஜயலட்சுமி ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்களை பகிர்ந்து கொண்டனர்.



## "மனித உரிமை காப்பாளர்களுக்கு காப்பில்லை"

28.01.2011 அன்று மதுரையில் உள்ள மக்கள் கண்காணிப்பகத்தில் மனித உரிமைகள் விவாத அரங்கில் நடைபெற்ற "மனித உரிமைக் காப்பாளர்களுக்கு காப்பில்லை" என்ற தலைப்பில் வழக்கறிஞர் திருமிகு.ஹென்றி திபேன், செயல் இயக்குனர், மக்கள் கண்காணிப்பகம் அவர்கள் ஐக்கிய நாட்டு சபையின் பிரதிநிதியின் இந்திய அனுபவங்களை பொது மக்கள் மத்தியில் பகிர்ந்து கொண்டார். வட இந்தியாவில் மனித உரிமைக்காக போராடுபவர்கயை அரசு தீவிரவாதிகளாகவும், நக்சலைட்டாகவும், மாவோஸ்டாகவும் அவர்கள் வழக்குகள் பதிவு செய்யப்படுவதாக கூறினார். மேலும் தேசிய மனித உரிமை அமைப்பு சிறப்பாக செயல்படவும், அதற்கு உயிர் ஊட்டவும் பல்வேறு ஆலோசனைகள் தெரியப்படுத்தப்பட்டதாகவும் கூறினார். இக்கூட்டத்திற்கு ஆரோக்கிய அகத்தின் சார்பாக திரு.ராஜன், இயக்குனர் கலந்து கொண்டார்.




கோயமுத்தூரில் உள்ள KKID நிறுவனத்தில் நடைபெற்ற
இரண்டு நாள் பயிற்சியில் திருநங்கைகள்

*குறிப்பு:-*

செய்தி மடலை படித்த பின்பு தங்கள் அன்பான கருத்துக்களை/விமர்சனங்களை இயக்குனருக்கு எழுதி அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

AROGYA AGAM

*வெளியிடுவோர் :*

இயக்குனர்

**ஆரோக்கிய அகம்**

ஆண்டிபட்டி, தேனி மாவட்டம்-625 512, Ph: 04546-242306/244311

E-mail: arogyaagam@gmail.com, Website: www.arogyaagam.org